# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1979 பெப்ரவரி 19

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## I. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### தமிழ்நாடு தலைமைச் செயலகக் கட்டிடம்

* வினா எண் 100-அ திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு தலைமைச் செயலகத்தின் அலுவலகங் களுக்காக கூடுதலாகக் கட்டப்பட்ட 11 மாடி கட்டடத்திற்கு போடப்பட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(ஆ) அதற்கு ஆன இறுதி செலவு எவ்வளவு ?

(இ) இங்கு பொருத்தப்பட்டுள்ள மின் சாதனங்கள், மேஜை நாற்காலிகள் இவைகளுக்கான செலவு எவ்வளவு?

(ஈ) மேலும் இடவசதிக்காக கூடுதல் கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன் :—

(அ) ரூ. 189 லட்சம்.

(ஆ) ரூ. 1, 74, 07, 000

(இ) மின் சாதனங்களுக்காக ஆன செலவு ரூ. 29,06,718. மேஜை நாற்காலிகளுக்காக ஆன செலவு ரூ. 2, 48, 743.

(ஈ) ஆம். சட்டமன்றத்துறைக்காகவும், சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வு அறை அமைக்கவும் புதிதாக ஒரு கட்டிடம் ரூ. 1.30 லட்சம் செலவில் கட்ட நிர்வாக ஒப்புதலளிக்கப் பட்டுள்ளது.

[1979 பிப்ரவரி 19

திரு. என். கிட்டப்பா : தற்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையையொட்டிய நூலகத்தில் போதுமான இடம் இல்லை என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும், எனவே புதிதாகக் கட்டப்பட்டிருக்கிற இந்தக் கட்டடத்தில் அந்த நூலகம் சிறப்பான முறையில் அமையத்தக்க வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தக் கட்டடம் தலைமைச் செயலகத்திற்காகக் கட்டப்பட்ட கட்டடம். சட்டமன்ற உறுப்பினர்களுக்காக, அவர்களின் வசதிக்காக ரூ. 1, 30, 000 செலவில் வேறு ஒரு திட்டம் மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கான நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

திரு. துரை முத்துசாமி : அசெம்பளி டிப்பார்மென்ட்டுக்காக ரூ. 1, 30, 000 செலவிடப்படயிருப்பதாகச் சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். அந்தத் தொகை போதாது என்று கருதுகிறேன். எனவே அதை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எந்தவகையில் போதாது என்று கருதுகிறார்கள் என்று தெரியவில்லை. ரூ. 1,30,000 என்பது போதுமானது.

திரு. து. இராமசாமி : தலைமைச் செயலகத்திற்கு என்று கட்டப்பட்டிருக்கிற அந்தக் கட்டடத்திற்கு பூர்ணமாக மாற்றப்படவில்லை என்று கருதுகிறேன். இந்தக் கட்டடத்தில் உள்ள செகரட்டரிகள், மற்றவர்களை அந்தக் கட்டடத்திற்கு மாற்றினால் இந்தக் கட்டடம் சட்டசபை அலுவலக அதிகாரிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் பயன்படத்தக்க வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரண்டு கட்டடமும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

*வினா எண். 100 —ஆ திரு. பொ. விஜயராகவன், திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தலைமைச் செயலகத்தில் மதிய உணவுக்கான தரம் வாய்ந்த உணவு விடுதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?